சம்மாந்துறை பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 02 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்ளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து சம்மாந்துறை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபை அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 53,688 தொகைக்கு ஏலவிற்பனை செய்யப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட 37 வகையான அலுவலக தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் நூலகப்புத்தகங்களின் கிரயம் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏசியா பவுண்டேசன், சமூக நிறுவனங்கள் மற்றும் இதர நபர்களினால் மீளாய்வாண்டில் சபையின் நூலகங்களிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட 672 புத்தகங்களின் பெறுமதி ரூபா 476,155 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் சபையின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகக் கிடைக்கப் பெற்ற ரூபா 5,170,258 கூட்டு மொத்த தொகையான முத்திரைக் கட்டணம், வட்டி வருமானம் மற்றும் சம்பள மீளளிப்பு என்பன இனங்காணப்படாத வைப்பாக காட்டப்பட்டமையினால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் காசு மீதி என்பன அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ஆதன வரி அறவீடு தொடர்பில் “கே” படிவத்தின் படி ஜனவரி 31 ஆந்திகதிக்கு முன் குறிப்பட்ட வருடத்திற்குரிய முழுவரிகளையும் செலுத்திய ஆதன உரிமையாளர்களிற்கு செலுத்தப்பட்ட 10% கழிவுத் தொகை கணக்குகளிற்கு கொண்டு வரப்படாமையினால் செலுத்தப்பட்ட கழிவுத் தொகையினால் திரண்ட நிதி மற்றும் நிலுவையாகவுள்ள வீதவரிகள் என்பன மிகையாக காட்டப்பட்டுள்ளன.

(உ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 05 வாகனங்களின் பெறுமதியானது குறித்த அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி அவற்றின் சந்தைப் பெறுமதி ரூபா 61,003,982 தொகையாக காணப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 57,695,000 தொகையாக காட்டப்பட்டுள்ளமையால் ரூபா 3,308,982 தொகையினால் நிலையான சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதி என்பன குறைவாகக் காட்டப்பட்டுள்ளன.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆதன வரி அறவீட்டு மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் காணப்பட்ட மீதிகளின் பெறுமதிகளிடையே பின்வரும் வித்தியாசங்கள் காணப்பட்டன.

| ஆதன வரி அறவீடு | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | ஆதன வரி அறவீட்டுப் பதிவேட்டின் பிரகாரம் | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2017.01.01 ஆந் திகதிய மீதி | 11,749,647 | 16,305,780 | 4,556,133 |
| பட்டியலிடப் பட்ட வருமானம் | 3,887,719 | 4,329,858 | 442,139 |
| 2017.12.31 ஆந் திகதிய மீதி | 13,405,363 | 19,362,697 | 5,957,334 |

1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) தெரு விளக்கு மின்பாவனை தொடர்பாக இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்படவேண்டிய வருமதிகள் ரூபா 229,705 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 23 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) முற்பணக்கொடுப்பனவுகள் தொடர்பாக தீர்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 580,277 தொடர்பில் உறுதிப்படுத்தக்கூடிய எந்தவிதமான ஆவணங்கள் இன்றியும் அத்தொகையினை தீர்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமலும் 14 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக 2003 ஆம் ஆண்டின் படியான கணக்கு மீதிகளாக முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 29,811,585 கூட்டு மொத்தத் தொகையான 09 விடயங்கள் தொடர்பில் விபரமான ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | 3,535,155 | சபையின் கணனிகள், கணனி மென்பொருட்கள் மற்றும் கணனி உதிரிப்பாகங்களினை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 815,729 | 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 107 வைப்புக்களை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ சபை நடவடிக்கை எடுக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 10,855,743 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 4,556,592 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 6,299,150 அதிகரிப்பைக் காட்டுகின்றது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், அறவிடப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரிகளும் வரிகளும் | 3,888 | 3,902 | 2,246 | 13,405 | 3,888 | 3,888 | 1,539 | 11,750 |
| வாடகை | 19,292 | 19,008 | 19,670 | 8,990 | 19,142 | 19,544 | 14,920 | 9,651 |
| உரிமைக் கட்டணம் | 900 | 1,231 | 1,231 | - | 800 | 800 | 833 | - |
| ஏனைய வருமானம் | 18,153 | 17,078 | 17,078 | - | 17,586 | 11,518 | 11,518 | - |

2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 62,620,491 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 40,225,328 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 64% ஆக காணப்பட்டிருந்தது.

2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது மீளாய்வாண்டு இறுதிவரை அறவிடப்படவேண்டிய ரூபா 15,637,366 கூட்டு மொத்தமான வீதவரிகளில் 14% ஆன ரூபா 2,232,002 தொகையான வீதவரிகளே மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

2.2.4 விளம்பரப் பலகைகளுக்கான கட்டண அறவீடு

மீளாய்வாண்டில் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 24 விளம்பரப் பலகைகளுக்காக அறவிடப்படவேண்டிய ரூபா 219,061 தொகையான அனுமதிப்பத்திரக்

கட்டணத்தை 2018 செப்தெம்பர் 14 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 இறைச்சிக் கடைக் குத்தகை

பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் இயங்கிவரும் இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்கியமை தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இறைச்சிக்கடை குத்தகை நிலையங்களுக்கான கேள்விகள் கோரப்பட்டு குத்தகையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு கடைகள் வழங்கப்பட்ட போதிலும், 2018 செப்தெம்பர் 10 ஆம் திகதிவரை சபையினால் குத்தகையாளருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக மீளாய்வாண்டின் இறுதிவரையான ரூபா 5,926,648 தொகையான இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவையினை அறவீடுவது தொடர்பில் சபையினால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

(ஆ) கேள்வி கோரல் விளம்பரத்தில் 13 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய இறைச்சிக்கடை குத்தகை பணத்தை குத்தகையாளர்களிடமிருந்து நிலுவை இன்றி அறவிடுவதற்கு பிணை ஆவணமாக ஆதனத்தின் வரலாற்றுப் பத்திரம் மற்றும் உறுதியின் பிரதி என்பன பிரசித்த நொத்தாரிசு மூலம் உறுதி செய்து பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) இறைச்சிக் கடை தொடர்பாக பொறுப்பளிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட கடமைப் பட்டியலின்படி குத்தகையாளர்களிடம் உடன்படிக்கை செய்தல், பிணை ஆவணம் பெற்றுக்கொள்ளல், குத்தகை அறவீட்டுப் பதிவேட்டினைப் பேணல் மற்றும் நிலுவைகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் போன்ற கடமைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

2.2.6 பொதுச் சந்தை குத்தகைகள் மற்றும் சந்தைக் கடை வாடகை

பொதுச் சந்தை குத்தகைகள் மற்றும் சந்தைக் கடை வாடகை ரூபா 3,055,860 தொகைள் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்யப்படாது நிலுவையாகக் காணப்பட்டிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, அரசாங்க நிர்வாக அமைச்சு மற்றும் மாகாண உள்ளூராட்சித் திணைக்ளத்திடமிருந்து பெறப்பட்டு சபையினால் பன்படுத்தப்பட்டுவருகின்ற 12 வாகனங்கள் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக உரிமை மாற்றப்படாமல் காணப்படுகின்றன.

(ஆ) அலுவலக கட்டிடங்கள், பொது நூல் நிலையங்கள், பொதுச் சந்தைகள், பொது விளையாட்டு மைதானங்கள், பொது மையவாடிகள், எலும்பு அரைக்கும் ஆலையம், சிறுவர் பூங்காக்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் விலங்கு அறுமனை என்பன அமைந்துள்ள 48 காணிகளின் உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 ஆளணி முகாமைத்துவம்

பிரதேச சபையில் சிற்றூழியர் தரத்தில் 59 ஊழியர்கள் நிரந்தர பதவியாகவும், 60 ஊழியர்கள் தற்காலிக அமைய ஒப்பந்த அடிப்படையிலும் பணிபுரிகின்றனர். இருப்பினும், இவர்களில் வீதி வேலையாளர் பதவியில் உள்ளவர்கள் காவலாளியாக பணிபுரிதல் மற்றும் சுகாதார வேலைத் தொழில் பதவியில் உள்ளவர்கள் அலுவலக சிற்றூழியராக பணிபுரிதலானது அவ் ஊழியரகள் நியமிக்கப்பட்ட குறித்த பணிகளை பூரணமாக நிறைவேற்றிக்க கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2005 ஆம் ஆண்டில் காணாமல் போன ரூபா 95,670 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்பு மற்றும் 2015 ஆம் ஆண்டில் காணாமல் போன ரூபா 35,000 கைப்பட கருவி என்பன தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நட்டத்திற்கான காரணத்தினையும் நட்டத்திற்குப் பொறுப்பானவர்களையும் கண்டு அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) 1999 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட சபையின் ஹிஜ்ரா பொதுச் சந்தையில் உள்ள 84 கடைகளை வாடகைக்கு வழங்கியது தொடர்பில் கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற எழுத்து மூல கூற்றின்படி இப்பொதுச் சந்தைக்கு அண்மித்துள்ள தனியார் கடைகள் குறைந்தது மாதாந்தம் ரூபா 6,000 தொடக்கம் ரூபா 20,000 வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற போதிலும் சபைக்குச் சொந்தமான இக்கடைகள் புதிய விலை மனுக்களை கோராது மாதாந்தம் ரூபா 585 தொடக்கம் ரூபா 3,335 தொகை வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கிவருவதனால் சபை அண்ணளவான ரூபா 2,700,000 தொகையை வருடாந்தம் இழந்து வருகின்றது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம | திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல் |